4

# உங்கள் சோதனைகளில் பெரும்பான்மையானவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுதல் [1:12-15]

*சாமுவேல் டெய்லர் கூல்ரிட்ஜ் என்பவரால் எழுதப்பட்ட "பழங்காலக் கடற்பயணியின் பிளவு" என்ற கவிதையானது, முதிர் வயதான மாலுமி ஒருவர் கடல் பற்றிய தமது வரலாற்றை இன்னொரு பாத்திரத்திற்கு, அவர்கள் இருவரும் ஒரு திருமணத்திற்கு விருந்தாளிகளாகச் சென்றிருக்கையில், கூறுவது பற்றியதாகும். முதிர் வயதான மாலுமி, ஒரு கப்பல் தனது பயணத்தின் போது காற்றில் அலைக்கழிக்கப்பட்டு ஆனால் கடைசியாக அண்டார்க்டிக் கடல்களில் இருந்து தனது சொந்த நாட்டிற்குச் செல்லும்போது, அதில் உயிர்பிழைத்திருந்த ஒரே ஒரு நபராக இருந்தார். முதிய மாலுமி தாம் மிகப்பெரிய கடல்பறவையான அல்பர்ட்டாஸ் என்ற பறவையைக் கொன்றிருந்த காரணத்தினால், தனது துர திர்ஷ்டங்கள் யாவற்றையும், இயற்கைக்கு மேலான சக்தியுள்ள முகமையினால் ஏற்பட்டது என்று கூறினார்.*

*கூல்ரிட்ஜ் இந்தக் கவிதையை எழுதிய நாள் முதற்கொண்டு, மக்கள் ஒரு பிரச்சனை அல்லது ஒரு தொல்லையைக் குறிப்பதற்கு "ஒரு அல்பட்ராஸ்ஸின்" உருவ[க]த்தைக் கழுத்தைச் சுற்றிப் பயன்படுத்தி இருக்கின்றனர். வாழ்வின் சோதனைகள் தொடர்ந்து தொந்தரவு தரும் "அல்பட்ராஸாக" ஒவ்வொரு விசுவாசியின் கழுத்தைச் சுற்றிலும் உள்ளதாகக் குறிக்கப்படுகிறது என்பதில் சந்தேகம் இல்லை.*

*கிறிஸ்தவ வாழ்வு என்பது எப்போதுமே, அடிக்கடி சித்தரிக்கப்படுவது போன்று, அமைதியான அனுபவமாக இருப்பதில்லை. மற்ற மக்களைப் போலவே கிறிஸ்தவர்களும், இடர்ப்பாடு மற்றும் துன்பம் என்பவற்றை எதிர்கொள்ளுகின்றனர். அவர்களின் உடல்கள் அவர்களின் அயலகத்தவர் உடல் களைப் போலவே வியாதி, காயம் ஆகியவற்றினால் பாதிக்கப்படக்கூடியதாக உள்ளன. அவர்களின் வீடுகள் தீப்பற்றுகின்றன, அவர்களின் உடமைகள் திருடப்படுகின்றன, அவர்கள் வேலை இழந்து போகின்றனர், மற்றும் அவர்களின் குடும்பங்கள் மற்ற குடும்பங்களைப் போலவே அச்சுறுத்தப்படுகின்றன!*

*வெளியிலிருந்து வரும் வாழ்வின் சோதனைகளை, உள்ளே வரும் சோதித்தல்கள் ஆக அனுமதித்தல் என்பதே கிறிஸ்தவர்களுக்கு உண்மை யான அபாயமாக உள்ளது. நமது சூழ்நிலைகள் நம்மைச் சோதிக்கிற போது, நாம் தேவனுக்கு எதிராக முறையிடுபவர்களாக, அவரது அன்பைப் பற்றிக் கேள்வி கேட்பவர்களாக, மற்றும் அவரது சித்தத்தை எதிர்த்து நிற்கிறவர்களாக நம்மைக் காணலாம். 1:12-15ல் யாக்கோபு, இந்த வாழ்வின் சோதனைகளுக்குச் சாத்தியமாக உள்ள இரு எதிரெதிர்ப் பதில்செயல்கள் பற்றிக் கூறுகிறார். நிறைவு*

விளைவு என்பது, வாழ்வின் சோதனைகளில் நமது விசுவாசம் ஏற்படுத்த நாம் அனுமதிக்கும் வேறுபாட்டைச் சார்ந்ததாக உள்ளது.

## வெகுமதியைக் கொண்டுவரும் பதில்செயல் - சோதனைகளை உண்மையுடன் சகித்தல் (1:12)

ஏழ்மை, சமூக அநீதி அல்லது சுகவீனம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக இருந்தாலும், சோதனைகள் என்பவை எந்தக் காலத்திலும் சகித்துக் கொள்ளச் சுலபமானவைகளாக இருப்பதில்லை. எந்த சோதனையையும் எதிர்கொள்வதில் பொறுமை என்பதே கிறிஸ்தவரின் முதல் முன்னுரிமையாக இருக்கிறது என்று யாக்கோபு கூறியிருக்கிறார் (1:3, 4, 12). நாம் ஒரு சோதனையை அதன் நிறைவு வரையிலுமாகக் காணவும், என்ன நேர்ந்தாலும் உண்மையுள்ளவர்களாக நிலைத்திருக்கவும் வேண்டும். ஒவ்வொரு சோதனையிலும் நாம் எப்போதும் வெற்றிகொள்பவர்களாக இராதிருக்கலாம். ஆனால் நாம் ஒருக்காலும் விட்டுக்கொடுத்துவிடக் கூடாது அல்லது வாழ்வின் சோதனைகள் நம்மை வெற்றி கொள்ள அனுமதித்து விடக்கூடாது.

பொறுமையுள்ள மனிதரை யாக்கோபு “பாக்கியவான்” என்று கூறுகிறார். “பாக்கியவான்” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, “சந்தோஷமானவர்” என்று மாத்திரம் சுலபமாக மொழிபெயர்க்கப்பட முடியும். துரதிரஷ்டவசமாக, இவ்விரு வார்த்தைகளில் எதுவுமே கிரேக்க வார்த்தையின் முழுச் செயல்தாக்கத்தைத் தருவதில்லை. இவ்வார்த்தையைக் கிரேக்கர்கள், தங்கள் அழிவில்லாத “கடவுள்களின்” அகமகிழ்வான வாழ்வு பற்றி விவரிக்கப் பயன்படுத்தினர்.

சந்தர்ப்பப்பொருளில் யாக்கோபு, இந்த உலகத்தின் பிரச்சனைகளுக்கு அப்பாற்பட்ட ஒரு வாழ்வை விவரிப்பதாகக் காணப்படுகிறது. அவர் “பாக்கியம்” என்பது தேவனிடத்தில் இருந்து வரும் ஒரு வெகுமதி என்பதாகச் சித்தரிக்கிறார். தேவன் பலனளிப்பவர் என்று வேதாகமம் அடிக்கடி போதிக்கிறது (கொலோசெயர் 3:23, 24; எபிரெயர் 11:6). பொறுமையாக இருப்பவர்களுக்கு “ஜீவ கிரீடம்” ஒரு வெகுமதியாகத் தரப்படுகிறது. “கிரீடம்” என்பது ஒரு அரசகிரீடத்தைக் குறிப்பிடலாம் என்றாலும், அது குறிப்பாக இந்தச் சந்தர்ப்பப் பொருளில், வெற்றி பெற்ற ஒரு விளையாட்டு வீரனுக்குச் சூட்டப்பட்ட வெற்றிகிரீடத்தைக் குறிப்பதற்கே அதிக சாத்தியக்கூறு உள்ளது. கிறிஸ்தவர் சோதனைகளுக்கு எதிரான தமது போராட்டத்தில் வெற்றி பெறுகிறபோது, அவருக்கு ஒரு வெகுமதி அளிக்கப்படும் மற்றும் வாழ்வின் ஜீவ கிரீடம் (இந்த உலகத்தின் போராட்டத்தில் இருந்து விடுதலையான ஒரு வாழ்வு) என்பதே அந்த வெகுமதியாக உள்ளது என்று யாக்கோபு கூறுகிறார்.

## பகுத்தறிவு வாதத்தின் பதில் செயல் - சோதனைகளின்போது சோதிக்கப்படுதலுக்குச் சாய்ந்து போகுதல் (1:13-15)

மனிதர்களாகிய நாம் “பிறர் மீது குற்றம் சுமத்துவதை” நேசிக்கிறோம். நமது பிள்ளைகள் பின்வருமாறு விவாதம் செய்வதை நாம் எவ்வளவு அடிக்கடி கேள்விப்படுகிறோம்: “அவன்தான் இதைத் தொடங்கினான்”; “அவன் என்னை

இவ்வாறு செய்யும்படி செய்துவிட்டான்"; "என்னை அப்படிப் பார்க்காதீர்கள், அது என் தவறல்ல." பிள்ளைகள் மாத்திரம் தங்கள் செயல்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்வதில் இருந்து தப்பிப்பதில்லை. ஃபிளிப் வில்சன் என்பவர், "சாத்தான்தான் நான் இதைச் செய்யும்படி ஆக்கிவிட்டான்" என்று கூறியதன் மூலம் பல இலட்சக் கணக்கான மக்களைச் சிரிக்கச் செய்தார். அவர்கள் ஏன் சிரித்தனர்? ஏனென்றால் அவரது வசைத்துணுக்கானது, நமது செயல்களுக்குப் பொறுப்பேற்பதைத் தவிர்ப்பதற்கான நமது சொந்த விருப்பத்தை எதிரொலித்தது. சிலர் தங்களுக்கு ஏற்படும் சோதனைகள், சோதிக்கப்படுதல்கள் மற்றும் அதன் விளைவான பாவங்கள் ஆகியவற்றிற்கும் பிசாசானவனையல்ல ஆனால் தேவனையே குற்றம் சுமத்தினர் என்பது பற்றி யாக்கோபு கவலை கொண்டுள்ளார்.

யூதர்கள், வாழ்வின் அனுபவங்கள் பற்றிய தங்களின் உற்றுநோக்கல்கள் மற்றும் தங்களின் விளக்கங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், மனிதனை ஒரு நடமாடும் உள்நாட்டு யுத்தம் என்பதாகக் கருதுகின்றனர். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருவித விருப்பச் சாய்வுகள் அல்லது இரு இயல்புகள், அதாவது நன்மை மற்றும் தீமை ஆகியவை ஒன்றுடன் ஒன்று போராடுகின்றன என்ற கருத்தை அடைந்தனர். பவுலைப் போலவே (ரோமர் 7:15) நாமும் ஒப்புக்கொள்கிறோம், ஆனால் அப்படிப்பட்ட கருத்தானது, பொல்லாத விருப்பச்சாய்வு எங்கிருந்து வருகிறது என்று கூறுவதில்லை.

யூதர்கள், "தேவன் என்னை இவ்விதமாக உண்டாக்கியிருக்கிறபடியால், எனது பாவத்திற்கு *அவரே* பொறுப்பாவார்" என்று கூறுவார்கள். தேவனைக் குற்றம்சாட்டும் அந்தக் கருத்து ஆதாம் தொடங்கி இங்குள்ளது. அவர், "என்னுடனே இருக்கும்படி *தேவரீர்* தந்த ஸ்திரீயானவள் ..." என்று கூறினார் (ஆதியாகமம் 3:12; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த இராபர்ட் பர்ன்ஸ் என்ற கவிஞர் பின்வருமாறு கூறியபோது மேற்கண்ட சிந்தனையையே விளக்கப்படுத்தினார்:

நீர் அறிவீர் நீரே என்னை பாங்கற்ற மற்றும் பலத்த
இச்சைகளுடன் உருவாக்கினீர்;
அவற்றின் மாயக்கவர்ச்சியான குரலைக் கவனித்தல்
என்னைத் தவறு செய்யும்படி அடிக்கடி வழிநடத்திற்று.

மக்கள் தங்கள் பாவம் நிறைந்த செயல்களில் இருந்து பாதுகாப்புத் தேடி அடிக்கடி, "நான் மனிதன் தானே" என்று கூக்குரல் இடுவார்கள். இது, தேவன் நம்மை இவ்வாறு படைத்துள்ளதால், நாம் நமது செயல்களுக்குப் பொறுப்பாளிகள் ஆக்கப்படக்கூடாது என்று மறைமுகமாக உணர்த்துகிறது.[1]

இவ்வகையான சிந்தனையை மாற்றுவதற்கு யாக்கோபு முயற்சி செய்தார். நாம் பாவம் செய்தால், நாம் சோதிக்கப்படுவதற்கு இடம் கொடுத்தால், அதை நாம் அறிக்கையிட்டுக் கடந்துசெல்லக் கடவோமாக. தேவன் நம்மை இடறி விழச் செய்வதற்கான வழிகளைப் பற்றி நினைத்தார் என்பதுபோல் நாம் தேவன்மீது குற்றம் சாட்டாது இருப்போமாக. யாக்கோபு, "தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல" என்று கூறுகிறார் (1:13). பொல்லாங்கு செய்யும்படி சோதிக்கப்படுதலுக்குத் தேவனே

பொறுப்பாகிறார் என்று கூறுதலானது, தேவனுடைய இயல்பைப் பற்றிய நமது அறியாமையைக் காண்பிக்கிறது. தேவன் ஒருக்காலும் பொல்லாங்கை அனுபவித்திருப்பதில்லை அல்லது அவர் பொல்லாங்கினால் சோதிக்கப்பட்டிருப்பது இல்லை. எவரொருவரையும் சோதிப்பதற்கு அவர் எப்படிப் பொறுப்பாக முடியும்? *அவரால் அது முடியாது!*

சோதனைக்கு இணங்குதல் என்பது நமது ஆத்துமாக்களின் அழிவுக்குக் காரணமாகிறது. சோதிக்கப்படுதல் என்பது பாவமல்ல. அப்படியிருந்திருந்தால், இயேசு ஒரு பாவியாக இருந்திருப்பார், ஏனெனில் அவரைச் சாத்தான் சோதித்தான் (மத்தேயு 4). சோதிக்கப்படுதலுக்கு இணங்கிச் சாய்ந்து நீங்கள் மயங்கி வசீகரிக்கப்பட்ட தவறைச் செய்வதில்தான் பாவம் கிடக்கிறது. ஒரு பழைய பழமொழியானது, "பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதைத் தடைசெய்ய உங்களால் கூடாது; ஆனால் அவைகள் உங்கள் தலைமுடியில் கூடுகட்டும்படி அவற்றை நீங்கள் அனுமதிக்கத் தேவையில்லை" என்று கூறுகிறது. நீங்கள் சோதிக்கப்பட்டிருத்தலில் இருந்து உங்களைத் தவிர்க்க முடியாது, ஆனால் நீங்கள் அதற்கு இணங்கிச் சாய வேண்டும் என்று அவசியம் இல்லை.

14 மற்றும் 15ம் வசனங்களில், பாவத்தின் கீழ்நோக்கிய வளர்ச்சி தரப்பட்டுள்ளது, இந்த வளர்ச்சி நான்கு வார்த்தைகளில் விவரிக்கப்படக் கூடும்.[2]

**இச்சை (1:14)**

"இச்சை" என்பது தன்னிலே ஒரு மிகச்சரியான விவரிப்பாக இருப்பதில்லை. இவ்வார்த்தை உண்மையில், "பொல்லாத இச்சை மற்றும் அதைக் கட்டுப்படுத்தத் தவறுதல்" என்று அர்த்தப்படுகிறது. இதைப் பற்றி நாம், "பொல்லாத இச்சை" என்று பேசுவதற்கான காரணம், தேவனால் தரப்பட்ட விருப்பத்தை அவர் நோக்கங்கொண்டிராத ஒரு வழியில் நிறைவேற்றுவதற்கான நமது வரம்பு கடந்த விருப்பமே ஆகும். உதாரணமாக, உண்ணுதல் என்பது சாதாரணமானதாக உள்ளது, ஆனால் பெருந்தீனி தின்னுதல் என்பது பாவமாக உள்ளது; உறக்கம் என்பது சாதாரணமானதாக உள்ளது, ஆனால் சோம்பேறித்தனம் என்பது பாவமாக உள்ளது. எபிரெயர் 13:4 கூறுகிறபடி, "விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக; வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்."

**வஞ்சனை (1:14)**

எந்த "ஒரு பொல்லாத இச்சையும்" அது உண்மையில் இருப்பதைப் போன்று தோன்றுவது இல்லை! நாம் "இழுக்கப்பட்டு சோதிக்கப்படும்" வகையிலேயே சாத்தான் உடையணிந்து கொள்கிறான். RSV வேதாகமமானது மீன்பிடித்தலில் இருந்து எடுக்கப்பட்ட ஒரு ஒப்புவமையான "சிக்குண்டு" என்பதைப் பயன்படுத்துவதால், மிகவும் வரைவளைவானதாக இருக்கலாம். ஒரு மீன் நீந்திக் கொண்டு இருக்கிறது, அப்போது அது, தொங்கிய நிலையில் முன்னும் பின்னும் அசைந்தாடும் புழு ஒன்றைக் காணுகிறது. இன்னும் ஒன்றும் நடக்கவில்லை; அது சோதிக்கப்படுதல் மாத்திரம் நடக்கிறது. விரைவில் அது அந்தப் புழுவைச் சுற்றி நீந்திவருகிறது, மற்றும் இன்னும் பிரச்சனை எதுவும் இல்லை. ஆனால் அதன் உள்ளான இச்சையானது, தண்ணீரில் "முன்னும் பின்னும் அசைந்தாடும்"

புழுவைப் பற்றிய இயல்பான முன்னெச்சரிக்கையை வெற்றிகொள்ளும்போது, அது "சிக்கிவிடும்."

நமது பலங்கள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றைப் பற்றிச் சாத்தான் நன்கு அறிந்துள்ளான். நம்மைக் கவர்ந்து இழுப்பது எது, நம்மை மயக்குவது எது மற்றும் நம்மை வஞ்சிப்பது எது என்பதை அவன் அறிந்திருக்கிறான். சோதித்தல் என்பது நமக்குள் ஆழமாகத் தாக்கவில்லை என்றால், தொங்குகிற எந்த நூல் கயிறும் சோதனையாக இராது.

### கீழ்ப்படியாமை (1:15)

பொல்லாத இச்சையானது கர்ப்பந்தரித்து கீழ்ப்படியாமையை (அல்லது கீழ்ப்படியாமையின் வாழ்வு நடையையாவது) பிறப்பித்தல் என்பதற்கு வேதாகமத்தில் பல உதாரணங்கள் உள்ளன. ஏவாள், விலக்கப்பட்ட கனிக்கான இச்சையுடன் போராடினாள், மற்றும் அவளது இச்சையானது கீழ்ப்படியாத தன்மையின் செயலுக்கு வழிவகுத்தது. அம்மோன் என்பவன், தாமார் என்பவள் மீது இச்சை கொண்டான், கட்டுப்படுத்தப்பட இயலாத அவனது இச்சையானது அவனை ஒரு மிருகத்தின் அளவுக்கு குறைத்துப் போட்டது. ஆகாப், பேரழிவான செயல்களைச் செய்யுமளவுக்கு, நாபோத்தின் திராட்சத்தோட்டத்தை விரும்பினான். பத்சேபாள் மீது தாவீது கொண்டிருந்த, கட்டுப்படுத்தமுடியாத இச்சையானது விபசாரம் மற்றும் கொலை என்ற செயல்களை விளைவித்தது.

நாம் நமது மன விருப்பத்தைப் பயிற்றுவிக்கக் கற்றுக்கொண்டு, சோதிக்கப்படுதலுக்குத் தீர்மானமான வகையில் "*இல்லை!*" என்று உரக்கக் கூவ வேண்டும்.

### மரணம் (1:15ஆ)

15ம் வசனப்பகுதியை J. B. பிலிப்ஸ் என்பவர், "... மற்றும் பாவம் என்பது நீண்ட ஓட்டத்தில் மரணம் என்று அர்த்தப்படுகிறது" என்று மொழிபெயர்த்தார். அதுவே வேதவசனங்களின் வலிவூட்டப்பட்ட போதனையாக உள்ளது: "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிறவழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதிமொழிகள் 14:12); "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23). பாவமானது நமது வாழ்விற்குத் தரம் எதையும் ஒருக்காலும் கூட்டுவதில்லை. பாவத்தைப் பொறுத்த மட்டில், நாம் பாவத்தில் திளைத்திருக்கும்போது, நாம் இழந்து போகிறவர்களாக இருக்கிறோம் மற்றும் நாம் *ஒருக்காலும்* நித்தியத்திற்கான நமது உறவுமுறைகளில் ஆதாயம் பெறுபவர்களாக இருப்பதில்லை.

## முடிவுரை

சோதனை வேளையின்போது சோதிக்கப்படுதல் என்பது கனவீனமல்ல; அது கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமது வளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவற்றின் பாகமாக உள்ளது. அபாயங்களைப் பற்றி நாம் அறிந்தவர்களாயிருக்கக் கற்றுக்கொண்டு, உதவிக்குத் தேவனிடத்தில் கேட்கத் தயாராக இருப்போமாக (1 கொரிந்தியர் 10:13).

குறிப்புகள்

[1]William Barclay, *The Letters of James and Peter* (Philadelphia, Pa.: Westminster Press, 1960), 58-61. [2]Warren W. Wiersbe, *Be Mature* (James) (Wheaton, Ill.: Victor Books, 1978), 37-38.